
ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை





வேணு : 1 | ஜூலை 1996 | கானம் : 12

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 ஜூலை 1996 கானம் : 12

## விஷய ஸூசிகை



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 8 | 4 |
| 3. | ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும், உரையும்-1 | 8 |
| 4. | சபரி மோக்ஷம் | 13 |
| 5. | ரகு வம்ஸத்தில் ஒரு காட்சி | 19 |
| 6. | ஸ்ரீ குருஜியின் உபன்யாஸங்களிலிருந்து | 20 |
| 7. | கணி கண்ணன் கதை | 23 |
| 8. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-11 | 27 |
| 9. | செய்திகள் | 31 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |


**முன் அட்டைப் படம் :**

ஹரித்வார் க்ஷேத்திரத்தில் கங்கை நதியில் ஸ்ரீ குருஜியும் பக்தர்களும் நீராடி விட்டு வரும் வழியில் ஒரு காட்சி.

**பின் அட்டைப் படம் :**

பூனே அருகிலுள்ள தேஹு க்ஷேத்திரத்தில் 'இந்திராயினி' நதிக் கரையில் ஸ்ரீ குருஜி அனுஷ்டானம் செய்கின்றார்.



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்:

ராகம்: - சிம்மேந்திர மத்யமம் தாளம்:- ஆதி

*அத்புத கனவு ஒன்று கண்டேன் - தோழி,*
*ஆராவமுதனை அதில் கண்டேன்*

*பாஸ்கர க்ஷேத்திரத்தின் புண்ய மூர்த்தியாம்*
*ரதத்தில் வந்து என் அகத்தில் புகுந்தான். (அத்புத)*

*சாரங்கபாணி என்னை ஜாடையிலே அழைத்தான்*
*எனை மணந்திடவே வந்ததாக உரைத்தான்*
*வெட்கத்தால் நானும் தலை குனிய நின்றேன்*
*கை பிடித்தென்னை அழைத்துச் சென்றான்*
*புருஷோத்தமனுடன் நான் வைகுண்டத்தில்*
*நித்திய சூரிகளின் நடுவே நிற்க (அத்புத)*

---

**Photographs**

Front Wrapper : Sri Sridhar
Back Wrapper : Smt. Latha Ravichandran, Hyderabad.

# 8

நித்யம் அநேக ஜனங்கள் ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்து தங்களுடைய பல விதமான கஷ்டங்களையும் மனதில் உள்ள குறைகளையும் கூறிக் கொள்வார்கள். சில பேர் பண உதவிக்காகவும், வருவார்கள். ஸ்ரீ குருஜி அவர்கள் சொல்வதையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொள்வார். அவர் அவர்களுக்கு வேண்டியதைத் தன்னால் முடிந்த அளவு செய்வார். ஆனாலும் தன்னை நாடி ஆன்மீக லாபத்தை உத்தேசித்து மிகவும் குறைவான நபர்கள்தான் வருகின்றார்கள் என்று குறைப்பட்டுக் கொள்வார்.

தினமும் அநேக ஜனங்கள் தங்களுடைய குடும்ப சிரமங்களையும், கஷ்டங்களையும் கூறுவதைக் கேட்பதாலும், இன்று உலகம் போகும் போக்கை நன்றாக உணர்ந்தவராக இருப்பதாலும், எல்லோருக்கும் இன்றைய கால கட்டத்தில் நாம கீர்த்தனம் ஒன்று தான் வழி என்பதை ஓயாமல் உபதேசித்தும் அனுஷ்டித்தும் வருகின்றார்கள். அதே சமயம் சிலர் தங்கள் மார்க்கத்தை உபதேசிக்கும் பொழுது, மீதி மார்க்கங்களை பரிகசித்து அதில் உள்ள குறைகளை பெரிதாகக் கூறுவார்கள். ஸ்ரீ குருஜி அப்படி சொல்வதில்லை. வேதாந்தமோ, யோகமோ, கர்மானுஷ்டானமோ, பக்தியோ, எல்லாமே ஒரே பரமாத்மாவை அடைவதற்கான பல வழிகள், அவர் அவர்களுக்கு எதில் ருசி உள்ளதோ, சாமர்த்தியம் உள்ளதோ அவர் அவர்கள் அந்த மார்க்கத்தில் செல்வதில் தவறு என்ன இருக்கின்றது என்பார். ஆனால் அப்படி கடினமான சாதனைகளைச் செய்வதற்கு சாமார்த்தியம் அநேகமாக வெகு குறைவான ஜனங்களுக்கே

உள்ள போது, மற்றவர்களின் கதி என்ன? ஆகவே எல்லோராலும் ஸுலபமாக அனுஷ்டிக்கக் கூடிய ஒரே தர்மம் நாம கீர்த்தனம் தான் என்று வலியுறுத்திக் கூறுவார்.

ஸாதனை செய்ய விரும்புபவர்கள், தியானத்தையோ, யோகத்தையோ, ஆத்ம விசாரத்தையோதான் ஸாதனையாகக் கருதுகின்றார்களே தவிர, நாம கீர்த்தனத்தையோ, நாம ஜபத்தையோ ஸாதனையாக நினைப்பதில்லையே என்ற வருத்தம் அவருக்கு உண்டு. நாம ஸங்கீர்த்தனமும் ஸாதனை தான். *தியானத்தினால், யோகத்தினால், வேதாந்த விசாரணத்தினால் என்ன பலன்கள் ஏற்படுமோ அத்தனையும் நாம கீர்த்தனத்தினாலேயே அவசியம் ஏற்படும்* என்பதை மிகவும் வலியுறுத்திக் கூறுவார்.

மாலை நேரங்களில் நாம கீர்த்தனம் செய்வதால் மனது சுத்தமாவது போல் வேறு எந்த ஸாதனத்தினாலும் ஆவது இல்லை என்று கூறுவார். நாம கீர்த்தனம் செய்பவர்களைக் கண்டால் ஸ்ரீ குருஜிக்கு ஆனந்தம் தாங்காது.

பாலகிருஷ்ணன் என்பவர் ஸ்ரீ குருஜியிடம் அனன்யமாக பக்தி கொண்டவர். இவர் முதன் முதலில் ஸ்ரீ ரமண மஹரிஷியின் பக்தராக இருந்தவர். அடிக்கடி திருவண்ணாமலை சென்று கிரி பிரதக்ஷிணம் செய்து வருவார். அடிக்கடி ரமணாஸ்ரமத்தில் தங்கியும் வருவார். பகவான் ரமண மஹரிஷிகளின் கிரந்தங்களை பாராயணம் செய்து வருவார். யாரிடம் பேசினாலும் ரமண மஹரிஷிகளைப் பற்றியே பேசுவார். ரமண மஹரிஷியைத் தவிர வேறு கோவில்களுக்கோ, ஸ்வாமி களிடமோ செல்லவும் மாட்டார். அந்த அளவிற்கு பகவான் ரமண மஹரிஷியிடம் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.

ஒரு சமயம் அவர் வேலை பார்த்து வந்த கம்பெனி விஷயமாக ஐதராபாத்துக்கு சென்றார். அங்கு அவர் Birla Mandir-க்குச் சென்ற சமயம், பகவான் ரமண மஹரிஷிகளைப்

பற்றிய ஒரு புத்தகத்தைப் பார்த்து ஆசையாக வாங்கிப் படித்தார். அதில் ஒரு சம்பவம் கீழ்க்கண்டவாறு இருந்தது.

**''அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரையே குருவாகக் கொண்டு ஒருவர் ஸாதனைகளைச் செய்து வந்தார். ஆனால் அவருக்கு ஒரு ஜீவித காலத்தில் உள்ள ஒரு மஹாத்மாவை குருவாக அடைந்தால் ஆன்மீக முன்னேற்றம் அடைய மிகவும் உதவியாக இருக்கும் என்று தோன்றியது. அது சமயமாக அவருடைய நண்பர் திருவண்ணாமலையில் இருக்கும் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளைப் பற்றி இவரிடம் கூறி, சென்று தரிசனம் செய்யும்படி கூறினார்.**

**இவரும் திருவண்ணாமலை சென்று பகவான் ரமண மஹரிஷிகளைத் தரிசனம் செய்த பொழுது அவருக்கு சமீபத்தில் அன்று ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் படம் இருப்பதைக் கண்டார். அவருக்கு மிகவும் ஆனந்தமாக ஆகிவிட்டது.''**

இதைப் படித்த பாலகிருஷ்ணனுக்கு இந்த சம்பவம் மிகவும் கவர்ந்துவிட்டது. தனக்கும் இது போல் ஜீவித காலத்தில் இருக்கும் ஒரு மஹாத்மா குருவாகக் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது.

கொஞ்ச நாளில் பாலகிருஷ்ணனுக்கு அவருடைய நண்பர் நந்த குமாரிடமிருந்து, ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் ஸ்ரீ குருஜியைப் பற்றிக் குறிப்பிட்டு, அவசியம் சென்று தரிசனம் செய்யவும் என்று எழுதியிருந்தார். பாலகிருஷ்ணனும் முதல் முதலாக ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்ய வந்த பொழுது, ஸ்ரீ குருஜி தனியாகத்தான் இருந்தார். பாலகிருஷ்ணனிடம் ஸ்ரீ குருஜி ரமணரைப் பற்றியே முதலில் பேசினார். அதுவே பாலகிருஷ்ணனுக்கும் ஆச்சர்யமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

பிறகு அடிக்கடி ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்ய வர ஆரம்பித்தார். அவர் தன்னுடைய பிரார்த்தனைக்காக

வைத்திருந்த பகவான் ரமண மஹரிஷிகள் படத்தின் முன்பு நின்று, தங்களுடைய சங்கல்பத்தின்படிதான் நான் குருஜியிடம் போகின்றேனா? இதற்கு பதில் கூற வேண்டும் என்று மனம் உருகிப் பிரார்த்தித்தார். ரமண மஹரிஷிகள் படத்தின் மேல் இருந்த செம்பருத்திப் பூ மிகவும் அழகாக அசைந்து அசைந்து கீழே விழுந்தது.

பகவான் அனுப்பித்துத்தான் தான் வருவது உண்மை யானால் தன்னை குருஜி இந்த இடத்தில் தொட வேண்டும் என்று நினைத்து வருவார். ஸ்ரீ குருஜி அன்று அவரை அதே இடத்தில் தொட்டுப் பேசுவார்.

சில நாட்கள் கழித்து அவர் வரும்பொழுது குருஜிக்காக துளஸி வாங்கி அதை பையில் வைத்திருப்பார். ஸ்ரீ குருஜி கண்டுபிடிக்கின்றாரா என்று பார்ப்போம் என்று இருப்பார். ஸ்ரீ குருஜி அவரிடம் அன்று துளஸியைப் பற்றி பேசுவார். உடனே அவரே வெளியில் எடுத்துக் கொடுத்து விடுவார். இப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக முழுவதுமாக தன்னை ஸ்ரீ குருஜியிடம் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்அவர்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'- ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் (இரண்டு பாகங்கள்) விலைக்குக் கிடைக்கும். 10 கேஸட்டுகள் கொண்ட ஒவ்வொரு பாகமும் ரூ. 200/- V.P.P.யில் அனுப்ப ஒவ்வொரு பாகத்திற்கும் ரூ.50/- கூடுதல் .

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-**

எஸ். பாலகிருஷ்ணன், (PP. 4896264)
36/14, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை-83.



# ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும், உரையும் - I

அகிலாண்டகோடி நாயகனானவனும் உலகத்தின் ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் முப்பெரும் தொழில்களை மேற்கொண்டவனுமான அப்பரம்பொருள் அறிதுயிலில் இருக்கின்றான்.

உலகத்தைக் காக்கும் பொருட்டு திரேதாயுகத்தில் அவதரித்த ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை, தன்னுடைய ஆசிரமத்திற்கு தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்றபோது, வழியில் ஒரு நாள் துயில்கொண்ட ஸ்ரீ ராமனை விடியற்காலைப் பொழுது எழுப்புதற்பொருட்டு ''கௌசல்யா சுப்ரஜா ராமா'' என்னும் சுலோகத்தால் கண் விழிக்கச் செய்த விஸ்வாமித்திரரின் சுப்ரபாத பாடலைக் கொண்டு, அர்சாவதாரமாக எழுந்தருளி யுள்ள திருமலை ஸ்ரீ ஸ்ரீநிவாச மூர்த்தியை வழிபடும் வகையில் ''சுப்ரபாத ஸ்தோத்திரம்'' நாள் தோறும் இறைவன் ஸன்னதியில் பாடப்பட்டு வருகின்றது.

சாதாரணமாக ஒவ்வொருவரும் விடியற்காலையின் போது, துயிலெழுந்து ஹரி நாம ஸ்மரணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதனால் பாபங்கள் கரைந்து, நன்மைகள் உண்டாகும் என்றும் மனு ஸ்மிருதி, தர்ம சாஸ்திரங்கள், பாகவத புராணங்கள் ஆகியவற்றில் கூறப்படுகின்றன. ஆகவே இறைவனின் திருநாமங்களை கோயில்களில் இறைவனின் ஸன்னிதியின் முன்பு, அவனுடைய திவ்ய மங்கள ஸ்வரூபத் தையும், அவனிருக்கும் பக்திச் சூழ்நிலையையும் மனதிற் கொண்டு ஓதி வழிபடுபவனுடைய வினைப்பயன்கள் மறைந்து இறைவனின் அருளைப் பெறுவானாவான்.

நாமும், மதுரமுரளியில் அவற்றைப் பிரசுரிப்போம்.

*கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।*
*உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥* 1

கோசலை மனங்குளிர அவள் மணி வயிறு வாய்த்தவனே! காலை வேளையாய் விட்டது. நாம் தினந்தோறும் செய்ய வேண்டிய ஸந்த்யா வந்தனம் முதலிய கருமங்களைச் செய்ய வேண்டும். ஆதலின் நீ (உன் தம்பியுடன்) உறங்காதெழுந் தருள்வாயாக.

குறிப்பு:- திருவேங்கடவனும் இராமனும் ஒருவனே.

*உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த உத்திஷ்ட கருடத்வஜ ।*
*உத்திஷ்ட கமலாகாந்த த்ரைலோக்யம் மங்களம் குரு ॥* 2

நீ கண் விழிக்காவிடில் மூவுலங்களும் செம்மை பெறா தழியும். ஆதலின் அவைகளை வாழ்விப்பதற்காக நீ திருக்கண் மலர வேண்டும்.

*மாதஸ்ஸமஸ்தஜகதாம் மதுகைடபாரே:*
*வக்ஷோவிஹாரிணி மநோஹர திவ்ய மூர்த்தே: ।*
*ஸ்ரீஸ்வாமிநி ச்ரிதஜந ப்ரியதாந சீலே*
*ஸ்ரீ வேங்கடேச தயிதே தவ ஸுப்ரபாதம் ॥* 3

அழகின் மிகுதியால் திருவேங்கடமுடையான் திருவுள்ளத்தைக் கவர்ந்து அவனுடைய திரு மார்பில் எப்பொழுதும் இருந்து விளையாடக் கூடிய செல்வாக்கு உனக்கு அவனிடத்தில் உண்டு. அத்தகைய அன்பு அவனுக்கு உன்னிடத்தில் உண்டு. எல்லா உலகங்களுக்கும் தாயாகிய நீ இவ்வுலகத்தவர்கள் உன்னை அண்டி வேண்டும் பயன்கள் அனைத்தையும் கொடுக்கும் இயல்புள்ளவளாயிருக்கிறாய். நீ திருக்கண் மலர வேண்டும்.

*தவ ஸுப்ரபாத மரவிந்தலோசநே*
*பவது ப்ரஸந்ந முகசந்த்ர மண்டலே ।*
*விதிசங்கரேந்த்ர வநிதாபிரர்ச்சிதே*
*வ்ருஷசைலநாததயிதே தயாநிதே ॥* 4

குளிர்ந்த கண்கள், தெளிந்த முகம், பற்றினவர்களிடத்தில் அருள் முதலிய உயர்ந்த குணங்களை உடைய உன்னிடத்தில் திருவேங்கடமுடையான் அன்புடன் இருக்கிறான். இத்தகைய மேன்மை வாய்ந்த உன் அருளைப் பெற்று வாழ்வதற்காக ஸரஸ்வதியும், பார்வதியும், இந்த்ராணியும் உன்னை வணங்கித் தொழுகின்றனர்.

குறிப்பு:- திருவேங்கடமென்பது ஏழுமலைகள் கொண்ட ஒரு மலைத் தொடர் அதனால் அப்பிரானுக்கு ஏழுமலையான் என்றும் பெயர் உண்டு. அவைகளில் 'வ்ருஷ சைலம்' என்பது ஒன்று. மலைகளின் பெயர்களைப் பதினைந்தாவது சுலோகத்தில் காண்க.

*அத்ர்யாதி ஸப்தரிஷயஸ்ஸமுபாஸ்ய ஸந்த்யாம்*
*ஆகாசஸிந்துகமலாநி மநோஹராணி ।*
*ஆதாய பாதயுகமர்ச்சயிதும் ப்ரபந்நா:*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 5

வெகு தூரத்திலுள்ள ஸப்த ரிஷிகளும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஸுப்ரபாத ஸேவைக்காவும் அபிமுகமான ஆராதன ஸேவைக்காகவும் வந்துவிட்டனர். நீ துயிலெழுந்து ஸேவை சாதித்தருளுக.

குறிப்பு:- ஸப்தரிஷி - 'ரி'யை ரி,ரு, இரண்டிற்கு மிடையாய் உச்சரிக்க.

*பஞ்சாநநாப்ஜபவ ஷண்முக வாஸவாத்யா*
*த்ரைவிக்ரமாதிசரிதம் விபுதா: ஸ்துவந்தி ।*
*பாஷாபதி: படதி வாஸர சுத்திமாராத்*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 6

அரன், அயன் முதலிய தேவதைகள் உன்னால் தாங்கள் பெற்ற நன்மைகளைக் கூறி உன்னைப் புகழ்கின்றனர். காலையில் உன் முன்னிலையில் படிக்க வேண்டிய பஞ்சாங்கத்தைத் தேவ குரு படித்துக் கொண்டிருக்கிறார். துயிலெழுந்து நீ திருச்செவி சாய்க்க வேண்டும்.

குறிப்பு:- பஞ்ச ஆநநன் - ஐந்து முகமுள்ளவன் (அரன்). அப்ஜ பவன்

- (பெருமாள் திருநாபிக்) கமலத்தில் தோன்றியவன் (அயன்). ஷண்முகன் - ஆறு முகங்களையுடையவன் (கந்தன்).

*ஈஷத் ப்ரபுல்ல ஸரஸீருஹ நாரிகேல-*
*பூகத்ருமாதி ஸுமனோஹர பாலிகாநாம் ।*
*ஆவாதி மந்த மநிலஸ் ஸஹ திவ்யகந்தை:*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 7

பொழுதும் புலருகின்றது. உனக்கென்றே இம்முளரி மலர்கள் முதலியவை சிறுகச் சிறுக மலருகின்றன. குளிர்ந்த காற்று வீசுகின்றது. நீ துயிலெழுந்து இவைகளைக் கடைக் கணித்து அருளல் வேண்டும்.

*உந்மீல்ய நேத்ரயுக முத்தம பஞ்சர ஸ்தா:*
*பாத்ராவசிஷ்ட கதலீபல பாயஸாநி ।*
*புக்த்வா ஸலீலமத கேளிசுகா: படந்தி*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 8

உன் திருநாமங்களைக் கூறி உன் பக்தர்களை மகிழ்விப்ப தற்காகவே, உன் திருக்கோயிலில் கூண்டுகளில் வைக்கப் பட்டிருக்கும் ஆடற் கிளிகள், நீ முன்னிரவு அமுது செய்து கலங்களில் மிகுந்திருக்கும் திருக்கன்னலமுது முதலிய உன் ப்ரஸாதங்களை உண்டு ஆனந்தத்துடன் உன் திருநாமங்களைக் கூறுகின்றன. நீயும் துயிலெழுந்து உன் திருநாமங்களின் இனிமையைத் துய்த்தல் வேண்டும்.

*தந்த்ரீ ப்ரகர்ஷ மதுர ஸ்வநயா விபஞ்ச்யா*
*காயத்யநந்த சரிதம் தவ நாரதோऽபி ।*
*பாஷாஸமக்ரமஸக்ருத்கரசார ரம்யம்*
*சேஷாத்ரி சேகர விபோ தவ ஸுப்ரபாதம் ॥* 9

ஓரிடத்தும் நிலை பெற்று நின்றறியாத நாரத முனிவரும் உன் பெருமையில் ஈடுபட்டு உன் திருக்கோயில் வாயிலில் நிலை பெற்று நின்று வீணையை மீட்டிக் கொண்டு உன் திவ்ய சரிதங்களைப் பாடுகிறார். எழுந்து திருச்செவி சாத்தியருளுக.

(தொடரும்)

# சபரி மோக்ஷம்

வால்மிகி ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் கடைசியாக வருகின்றது சபரி மோக்ஷ கட்டம். ஸ்ரீ ராமபிரான் ஜடாயுவிற்கும், கபந்தனிற்கும் ஸம்ஸ்காரங்களைப் பண்ணி விட்டு லக்ஷ்மணனுடன் பம்பா நதி தீரத்தில் வாஸம் செய்யும் சபரி பாட்டிக்கு கடாக்ஷம் செய்ய வருகின்றார்.

நாம் சபரி சரித்திரத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் ஸத் ஸங்கம் ஒருவரை எந்த அளவுக்கு பவித்ரமாக்குகின்றது என்பதைத்தான்.

ஒரு சமயம் விதி வசத்தால் யத்ருச்சையாக பம்பா நதிக்கரைக்கு வந்தாள் சபரி. அவள் வேடுவ குலத்தைச் சேர்ந்தவளாகத் தெரிகின்றது. மிருகங்களை அடித்து அதைக் கொன்று புசித்து வாழ்க்கையை நடத்தி வந்தவளுக்கு, ஏனோ அந்த நதி தீரத்திற்கு வந்தவுடன், அவ்வாறு செய்வது பாபம் என்று தோன்றிவிட்டது. அவளுடைய சித்தம் அஹிம்ஸையை சிந்திக்கத் தொடங்கியது. இது நாள் வரை தான் கொன்று சாப்பிட்டுவந்த விலங்குகளையேப் பார்த்து ரஸிக்க ஆரம்பித்து விட்டாள். அவளுக்கே ஆச்சர்யமாகி விட்டது தன் நிலையைப் பற்றி. அது மட்டுமல்ல, அவ்விடத்தில் பரம சத்ருக்களாக இருக்கக்கூடிய யானையும் சிங்கமும், மானும் வேங்கையும், பாம்பும், கீரியும் பரம பிரேமையுடன் பழகு வதைப் பார்த்தாள். ஆச்சரியம் தாங்கவில்லை சபரிக்கு. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே **"மதங்க மஹரிஷி"** மஹா தேஜஸ்வியாக ஸாம கானம் செய்து கொண்டு தன்னுடைய சீடர்கள் புடைசூழ வந்து கொண்டிருப்பதைப் பார்த்தா. அவருடைய ஸாந்நித்ய விசேஷத்தால் தான் அவ்விடம் அப்படியிருப்பதை உணர்ந்தாள். அவர்கள் பகவானைப் பார்த்தவர்கள் என்பதை புரிந்து கொண்டாள். அவளுக்கும்

பகவத் பக்தியில் ஆசை வந்து விட்டது, அதற்கு தனக்கு தகுதி இருக்கின்றதா என்று அவளுக்குத் தயக்கமாக இருந்ததால் முதலில் கைங்கர்யத்தில் ஈடுபட்டாள். அவர்கள் ஸ்நானத்திற்கு போகும் வழியில் உள்ள முட்களையும் சிறு கற்களையும் பொறுக்கி சுத்தம் செய்து வைத்தாள்.

மதங்க மஹரிஷி, தான் ஸ்நானத்திற்கு செல்லும் வழி இது நாள் போல் இல்லாமல் மிகவும் சுத்தமாக இருப்பதற்கு யாது காரணம் என்று வினவினார். அவருடைய சீடர்கள் சபரி என்ற ஒரு பெண்மணி புதிதாக வந்து தங்கியுள்ளாள், அவள் தான் இப்படி நித்யம் சுத்தம் செய்து வைக்கின்றாள் என்று கூற, உடனே அவளை அழைத்து வரச் சொன்னார்.

சபரியிடம் வந்து சீடர்கள் சொல்லி அழைத்துச் செல்ல, தான் செய்வது தவறோ என்று பயந்து கொண்டே சென்றாள். ஆனால் மதங்க மஹரிஷியோ அவளைக் குளிர குளிர கடாக்ஷம் செய்து தொடர்ந்து கைங்கர்யத்தைச் செய்து வர உத்தரவு கொடுத்தார்.

இப்படியாக இவள் தொடர்ந்து கைங்கர்யம் செய்து வருகையில், ஒரு நாள் ஆஸ்ரமத்தில் ஒரே பரபரப்பாக இருந்தது. பரபரப்பிற்கு யாது காரணம் என்று அவள் வினவ இன்று மதங்க மஹரிஷி சரீரத்தை விட்டு விட்டு வைகுண்டம் செல்ல இருக்கின்றார் என்று கூறினார்கள்.

மதங்க மஹரிஷியும் தன்னுடைய சீடர்களை ஒவ்வொரு வராகக் கூப்பிட்டு அவர்களுக்கு யாது வேண்டும் என்று வினவ, ஒருவன் தனக்கு அஷ்ட மஹா ஸித்திகளும் கைகூட வேண்டும் என்றான், ஒருவன் குறையாத ஐஸ்வர்யத்தை யாசித்தான், ஒருவன் தனக்கு எந்த வித்வத் ஸபையிலும் ஜயம் ஏற்பட வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

அவர் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்துவிட்டு சபரியைப் பார்த்து உனக்கு யாது வேண்டும் என்று மஹரிஷி கேட்க, தாங்கள் எங்களை விட்டு பரம பதம் செல்வதே பெரும்

துக்கமாக உள்ளது. தங்களுடைய திருமுக மண்டலத்தை நான் இனி எப்படிக் காண்பேன், என்று அழுது கொண்டே ''நான் அசடு, ஒன்றும் அறியாதவள் எனக்கு என்ன வேண்டும் என்று என்ன தெரியும்?'' என்று வருத்தப்பட்டாள்.

உடனே குரு நாதர் சந்தோஷத்துடனும் பரம கருணையுடனும் தாரக மந்திரமாகிய **''ராம''** நாமத்தை அவளுக்கு உபதேசம் செய்தார். அதற்கு சபரி ''இதை எந்த நியமத்துடன் ஜபம் செய்ய வேண்டும். இதன் அர்த்தம் எல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாதே, மேலும் இதற்கு நான் தகுதிதானா?'' என்று பரம வினயத்துடன் கேட்டாள்.

மஹரிஷியோ உனக்கு தகுதியில்லாமல் வேறு யாருக்கு உண்டு? கவலைப்படாதே. இதற்கு எந்த நியமமும் கிடையாது, எப்பொழுதும் ஜபம் செய்து வரலாம். இதனுடைய அர்த்தம் யாது என்று கேட்டாய் அல்லவா, ***இதன் அர்த்தம் உனைத் தேடிக் கொண்டு தானாக வரும்*** என்று அனுக்ரஹித்து மேலும் சொன்னார், எனது பிரிவாற்றாமையால் வருந்தாதே, நான் இங்கே ஸாந்நித்யத்துடன் வசித்து வருவேன், எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது உனக்கு காட்சியும் தந்து உன் கூட பேசவும் செய்வேன் என்று கூறி அக்னியில் பிரவேசித்து பரம பதம் அடைந்தார்.

ராம நாமத்தின் அர்த்தமான சாக்ஷாத் ராமச்சந்திர மூர்த்தி லக்ஷ்மண ஆழ்வாருடன் தன்னைத் தேடி வருவார் என்ற நம்பிக்கையுடன் ஸதா ராம நாமத்தை ஜபம் செய்து வந்தாள். நித்யம் ஆஸ்ரமத்தை சுத்தம் செய்து கோலம் போட்டு பம்பா நதி தீரத்திலிருந்து நல்ல பழங்களாக பறித்து வந்து ராமச்சந்திர பிரபுவிற்காக காத்திருந்தாள். இப்படியாக 13 வருடங்களுக்கு மேலாகி விட்டது.

ஒரு நாள் ஆஸ்ரமத்திற்கு அருகாமையில் இருந்து வந்த சிறுவர்கள் மூலமாக ராம லக்ஷ்மணர்கள் வருவதை தெரிந்து கொண்டு மட்டில்லா மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று



அவர்களுக்கு பாத ஸேவையும் செய்தாள். ***இது நாள் வரை சீதா பிராட்டியைத் தவிர யாரும் ஸ்பர்ஸிக்காத பாதங்களை சபரி தொட்டு பாத ஸேவை செய்ய ராமனும் அனுமதித்தார்.***

*பாதௌ ஜக்ராஹ*
*ராமஸ்ய லக்ஷ்மணஸ்ய சதீமத: ।*

உடனே பிரபு சபரியைப் பார்த்து மதுரமாக பேசலானான்.

*கச்சித்தே நிர்ஜிதா விக்நா:*
*கச்சித்தே வர்தகே தப: ।*
*கச்சித்தே நியத்: க்ரோத:*
*ஆஹாரஸ்ச தபோதனே: ॥*

*கச்சித்தே நியமா: பிராப்தா: ।*
*கச்சித்தே மனஸ: ஸுகம்*
*கச்சித்தே குரு ஸுஸ்ருஷா*
*ஸபலா சாருபாஷிணி ॥*

தங்களுடைய ஜப தியானங்கள் எல்லாம் எப்படி உள்ளன? கோபத்தைக் கட்டுப்படுத்தி விட்டீர்களா? மனதில் சாந்தி ஏற்பட்டு விட்டதா? இதற்கெல்லாம் அடிப்படை குரு ஸேவைதானே என்றெல்லாம் பிரபு கேட்கின்றார்.

**சாருபாஷினி** என்று ஸீதையைக் கூப்பிடுவது போல் சபரியைக் கூப்பிடுவானேன் என்றால்? அவ்வளவு அழகாக பேசக்கூடியவள். ஏற்கனவே குருநாதர் யாது வேண்டும் என்று கேட்ட பொழுதும் அழகாகப் பேசினாள். இப்பொழுதும் பிரபு உடனே, நான் மனிதன், என்னைப் பார்ப்பதற்குப் போய் யாராவது தபஸ் செய்வார்களா என்ன? என்று கேட்க.

*த்வயி தேவவரே*
*ராம பூஜிதே புருஷர்ஷப ॥*

''ராமா, நீ மனிதனில்லை நீ தெய்வம் நீ தெய்வம்'' என்று என் குருநாதர் கூறியுள்ளார். அவர் எப்பொழுதும் சத்தியத்தைத் தான் பேசுவார் என்று கூறி தான் பம்பா நதி தீரத்திலிருந்து பார்த்துப் பார்த்துப் பறித்து வைத்தப் பழங்களை ராம லக்ஷ்மணர்

களுக்குக் கொடுத்தாள். யாரிடமும் எதையும் வாங்கும் பழக்க மில்லாத சக்கரவர்த்தி திருமகனான ராம பிரான், சபரியின் பிரேமைக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு பழத்தை ஸ்வீகரித்து கொண்டான்.

உடனே சபரி தன்னுடைய குரு நாதர் வாஸம் செய்த இடம், அவர் உபயோகித்த தர்பாஸனம், கமண்டலம் என்று ஒன்று ஒன்றாக ஆசையுடன் காண்பித்தாள். அவர் பரம பதித்த அந்த அக்னியானது எந்த இந்தனமும் போடாமலேயே அணையாமல் எரிந்து கொண்டிருப்பதையும், குருவின் ஸாந்நித்யத்தால் அங்கு உலர்த்திய வஸ்திரங்கள் ஈரத்துடன் இருப்பதையும், புஷ்பங்கள் வாடாமல் இருப்பதையும் ஆசையுடன் காண்பித்துக் கொண்டே வந்தாள்.

ராம பிரான் தன்னைப் பார்த்து மஹரிஷிகளே பிரமை பிடித்து பேச்சு மூச்சின்றி நிற்கும் பொழுது, இவள் தன்னைப் பார்த்தும், தன்னுடைய குருவைப்பற்றி பேசுகிறாள் என்றால் அவளுடைய குரு பக்தி அவ்வளவு ஆச்சர்யமானது என்று சிலாகித்தார்.

அப்பொழுது ராம லக்ஷ்மணர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, பத்மாஸனத்தில் அமர்ந்து யோகீஸ்வரர்கள் எப்படி பிராணனை தியாகம் செய்வார்களோ அப்படி சபரி பிராணனைத் தியாகம் செய்து தன்னுடைய சரீரத்தை பஸ்மமாக்கினாள். மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட ரூபத்துடன் வெளிப்பட்டு தன்னுடைய குரு நாதரின் திருவடியை அடைந்தாள். ராம லக்ஷ்மணர்கள் சபரியின் மோக்ஷத்திற்கு சாட்சியாகத்தான் இருந்தார்களேத் தவிர, மோக்ஷம் அவளுக்கு ஏற்கனவே அவளுடைய குருநாதரான மதங்க மஹரிஷியால் அனுக்ரஹிக்கப் பட்டுவிட்டது. இதைத்தான் வேதாந்த தேசிகள் தன்னுடைய **ரகுவீர கத்யத்தில்** குறிப்பிடும் பொழுது ***"சபரி மோக்ஷ சாக்ஷி பூதா:"*** என்கின்றார். ஸத் ஸங்கமும் மஹாத்மாவின் அனுக்ரஹமும் தெய்வத்தையே நம் வசமாக்கி விடும் என்பதற்கு சபரியின் சரித்ரமே சாட்சி. ●

# ரகு வம்ஸத்தில் ஒரு காட்சி

ரகு வம்ஸத்தில் ஒரு சுவாரஸ்யமான கட்டம்.

மஹாராஜா அஜனும் அவருடைய பத்தினி இந்துமதியும் உல்லாசமாக சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த சமயம் ஆகாச மார்க்கமாக சில தேவர்கள் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து ஒரு புஷ்பம் வந்து அங்கிருந்த இந்துமதியின் மேல் விழ உடனே அவ்விடத்தி லேயே அவள் மரித்து விடுகின்றாள். அவளுடைய பிரிவாற்றா மையால் அஜன் பலவாறு புலம்பி அழுகின்றான். அவ்வாறு புலம்பும் பொழுது அவன் கூறுகின்றான், "தேவர்களிடமிருந்து புஷ்பம் வந்து மரித்து போன பிணத்தின் மேல் விழுந்தால் கூட அவர்களுக்கு உயிர் வந்து விடும் என்று கூறுவார்கள், அந்தோ! என் விஷயத்தில் தேவர்களிடமிருந்து புஷ்பம் விழுந்து உயிருடன் இருந்த என் மனைவி மரித்து விட்டாளே, இது என்ன கொடுமை!" என்று புலம்புகின்றான்.

இதிலிருந்து நாம் அறிய வருவது என்னவென்றால், பிரஹ்லாத ஸ்வாமிக்கு மஹாராஜ ஹிரண்ய கசிபு விஷத்தைக் கொடுத்தார். அவர் நாராயண ஸப்தத்துடன் அதை சாப்பிட அந்த விஷம் அவருக்கு அமிர்தமாகி விட்டது. பகவானுடைய அனுக்ரஹம் இருந்ததால் எப்பொழுது விஷம்கூட அமிர்தமானதோ, அது போல பகவானின் அனுக்ரஹம் இல்லாது போனால் அமிர்தம் கூட விஷமாகலாம் என்று தெரிகின்றது. ●

---

**A Correction**

June 96 issue - Front Wrapper Photo taken by Smt. Latha Ravichandran of Hyderabad (and not as published earlier)

# ஸ்ரீ குருஜியின் உபன்யாஸங்களிலிருந்து

குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு ஆரம்பத்தில் அனுப்பி வைப்பதே மிகவும் சிரமமான காரியமாக இருக்கும். வெகு சில குழந்தைகளே அடம் பிடிக்காமல் மிகவும் சமர்த்தாக பள்ளிக்குச் செல்லும். அப்படி பள்ளிக்கூடத்தில் சேர்ந்து மேல் வகுப்பில் படிக்கப் படிக்க அநேக குழந்தைகளுக்கு பள்ளிக்குப் போவதற்கே பிடிக்காமல் போய்விடும். காரணம் என்ன? பள்ளிக்கூடத்தில் இருக்கும் கட்டுப்பாடுகள் பிடிப்பதில்லை. கடினமான பாடங்கள் - நமக்கு ஈடுபாடு முழுவதும் படிப்பில் இல்லாததால் - புரிவதில்லை. இதையெல்லாம் தவிர அந்தந்த வயதிற்குத் தகுந்தாற் போல் வெளி விஷயமும் நம்மை ஆகர்ஷிக்கின்றது. ஆனால் அந்த அந்தக் காலத்தில் தாய் தந்தையர்கள் சரியாக அவர்களை கவனித்து பள்ளிகளுக்குக் கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்காமல் இருந்திருப்பார்களே யானால் அநேகம் நபர்கள் இன்று படிக்காதவர்களாகவே இருப்பார்கள். உண்மையில் யாருக்கு படிப்பில் ஆர்வமும் நாட்டமும் இருக்கின்றனவோ அவர்களை யாரும் கட்டாயப் படுத்தவோ, கவனிக்கவோ தேவையில்லை. அவர்களாகவே பள்ளிக்கூடத்திற்கு ஆர்வமாகச் செல்வார்கள். யாரும் கட்டாயப் படுத்தாமலே தங்கள் தங்களுடைய பாடங்களைத் தானாகவேப் படித்து நல்ல மதிப்பெண்களும் வாங்கி உயர்ந்த பதவியை அடைவார்கள்.

பள்ளியில் படிக்கும் எல்லோருக்குமே, டாக்டர் ஆவதற்கும், இஞ்சீனியர் ஆவதற்கும், கலெக்டர் ஆவதற்கும்

ஆசை. ஆசை எல்லோருக்கும் இருக்குமே தவிர, அதற்காக உழைப்பதற்கு யாரும் தயாராக இருக்க மாட்டார்கள்.

உலகத்தில் எல்லோரும் சுகம் மட்டும் வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். கஷ்டப்படுவதற்கு யாரும் தய்யாராக இல்லை. சுகம் மட்டும் தனியாக எப்பொழுதும் யாருக்கும் கிடைப்பதில்லை. அழகான ரோஜா புஷ்பம் கூர்மையான முட்களுக்கு நடுவில் தான் உள்ளது. மதுரமான தேன் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவன், தேனீக்களின் கொட்டுதலைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. அது போல எந்த ஒரு நன்மையும் கஷ்டம் இல்லாமல் கிடைக்காது. மஹாத் மாக்களும் மிகப்பெரிய தியாகத்திற்குப் பின்புதான் பகவானை அடைந்துள்ளார்கள். ஆகவே யாருக்கு உண்மையான ஆன்ம தாகமும் பகவத் விரஹமும் இருக்கின்றனவோ அவன் குரு சொன்ன வழிப்படியே தவறாமல் நடந்து எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் தாங்கிக் கொண்டு தீரனாக கலங்காமல் ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்து விடுகின்றான். ஆனால் யாருக்குத் தீவிரமான நாட்டம் இல்லையோ அவன் ஆத்ம ஸ்வரூபத் திற்காக ஆசைப்பட்டு வரும் பொழுது அவனுடைய ஆசையில் தீவிரம் இல்லாததால் சிறு கஷ்டங்களையும் தாங்க முடியாமல், தங்களை ஒரு ஒழுங்கிற்குக் கட்டுபடுத்திக் கொள்ள முடியாத தாலும் சாதனைகளில் இருந்தும் ஸத் ஸங்கத்திலிருந்தும் விலகி விடுகின்றார்கள்.

ஆனால் பள்ளிக்கு செல்ல அடம் பிடிக்கும் குழந்தையை எப்படி பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி ஒழுங்காக அனுப்பி வைத்தால் பிற்காலத்தில் சௌக்யத்தை அடைவானோ அது போல, குருநாதர் தான் எல்லோரையும் சாதனைகளில் நமக்கு எத்தனை சிரமம் ஏற்பட்டாலும் கலங்காமல் இருக்கச் செய்து பொறுமையாக அழைத்துச் செல்கின்றார். நாமும் முடிந்த வரையில் குருவிற்கு எந்த சிரமமும் வைக்காமல் நாமே

விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். விடாமல் செய்து வரும் ஜபத்தினாலும், தியானத்தினாலும் நிச்சயமாக நம்முடைய வாசனைகள் எல்லாம் குறைந்து நமக்கு சௌக்கியம் ஏற்படும். அதே சமயம் கோபத்துடன் பேசுவதாலும், பொறாமைப்படுவதாலும், எப்பொழுதும் தன்னைப் பார்த்து கழிவிரக்கப்பட்டு அழுவதாலும் நம்முடைய வாசனைகள் பெருகும்.

ஆகவே நாம் சமைக்கும் பொழுதும், எந்த வேலை செய்யும் பொழுதும், பஸ்ஸிற்காக காத்திருக்கும் பொழுது உட்பட எப்பொழுதும் ஜபத்திலேயோ, தியானத்திலேயோ இருந்து கொண்டே இருக்கவேண்டும். அப்படி இருப்பதனால் நம்முடைய வாசனைகள் பெருமளவில் குறைந்து நமக்கு நிச்சயம் சௌக்யம் ஏற்படும்.

---

ஒருவர் நம்மிடம் வந்து தன்னுடைய சொந்தங்களைப் பற்றியும் ஆஸ்தியைப் பற்றியும், பதவியைப் பற்றியும் பல விஷயங்களை கூறுகிறார். வேறு ஒருவர் மூலம் மேற்படி நபர் சுத்த பொய்யர், அவர் பொய்யைத் தவிர வேறு எதுவும் பேசமாட்டார் என்று தெரிந்து கொண்டால், அவர் சொல்லிய விஷயங்களில் சில உண்மையாக இருக்கக்கூடுமோ என்ற ஐயத்திற்கு இடம் இல்லாமல் எப்படி எல்லாம் பொய் என்ற முடிவுக்கு வந்து விடுவோமோ, அது போல பற்பல நாம ரூபங்களைக் காட்டும் நம்முடைய மனதே இல்லாத ஒரு வஸ்துவாக இருப்பதால் இந்த பிரபஞ்சம் மித்யையானதே.

- ஸ்ரீ குருஜி

# கணி கண்ணன் கதை

-ஸ்ரீ குருஜி

தொண்டை மண்டலத்தில் மொத்தம் 14 திவ்ய தேசங்கள் உண்டு. அதில் திருவெஃகா என்பதும் ஒன்று. வெஃகா, தண்கா என்றால் முறையே வெம்மையான காடு என்றும் தண்மையான காடு என்றும் அர்த்தம். ஆதியில் காடுகளில் ரிஷிகள் பூஜை பண்ணிக் கொண்டிருந்த இடங்கள் தான் அப்புறம் நாம் பார்க்கின்ற க்ஷேத்ரங்களாக ஆனதால் கா, காடு என்றே அவற்றில் பலவற்றின் பெயர்கள் இருக்கின்றன. திருவானைக்கா, திருக்கோடிகா, திருவேற்காடு, திருமறைக்காடு (வேதாரண்யம்) எல்லாம் இப்படி வந்ததுதான்.

தண்காவைத் தூப்புல் என்பார்கள். தூய புல்லான தர்ப்பை வளரும் இடம். வடகலை ஆசார்ய புருஷரான வேதாந்த தேசிகரின் ஜன்ம ஸ்தலம் அதுதான்.

தண்காவுக்கு இப்படிப் பெருமை என்றால், நம்முடைய கதைக்கு உரியவரான திருமழிசை ஆழ்வார் ஸம்பந்தப்பட்ட வெஃகாவில்தான், அதன் புஷ்கரணியில் ஆழ்வார்களில் முதல்வராக இருக்கப்பட்ட பொய்கை ஆழ்வார் அவதாரம் செய்திருக்கின்றார். அங்கேதான் யதோக்தகாரியாக பகவான் இருப்பது. யதோக்தகாரி என்ற பெயர் ஏற்படுவதற்கு முன்பே அவர் அங்கே புஜங்க சயனப் பெருமாளாகப் படுத்துக் கொண்டு இருந்திருக்கிறார். வரதராஜா ஆவிர்பவித்ததற்கு முன்பே இருந்திருப்பவர் இவர். ஏன் என்றால் ப்ரஹ்மா ஒரு யாகம் பண்ணி, அதில் வரம் தர வந்தவர்தான் வரதராஜா. அந்த யாகம் பண்ணும்போது ப்ரஹ்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் மனஸ்தாபம். அதனால் ப்ரஹ்மா ஸரஸ்வதியை ஒதுக்கிவிட்டு, ஸாவித்ரி, காயத்ரி என்ற இருவரை யக்ஞ பத்தினிகளாக வைத்துக்

கொண்டு யாகம் ஆரம்பித்தார். அப்பொழுது ஸரஸ்வதி ஒரே கோபமாக வேகவதி என்ற நதி ரூபம் எடுத்துக் கொண்டு, வேகமாக வெள்ளம் அடித்துக் கொண்டு யாக சாலையை நோக்கி வந்தாள். அந்த ஸமயத்திலே இந்த புஜங்க சயனப் பெருமாள் தான் நதி வருகிற வழியில் குறுக்கே போய்ப் படுத்துக்கொண்டு தடுத்தார். யக்ஞமும் பூர்த்தியாகி, ப்ரஹ்மாவுக்கு மாத்திர மில்லாமல் எல்லா ஜனங்களுக்கும் எல்லாக் காலத்திலும் வரம் கொடுப்பதற்காக வரதராஜா தோன்றிக் கோயில் கொண்டார். திருமழிசை ஆழ்வார் காஞ்சிபுரத்தில் இந்த புஜங்க சயனர் ஆலயத்திலோ, அல்லது அதை ஒட்டினாற் போலவோ தான் வஸித்து வந்தார். அப்பொழுதுதான் அவர் பெருமாளைத் தாம் சொன்னபடி செய்ய வைத்து யதோக்தகாரியாக்கியது.

வரதராஜா உள்படக் காஞ்சிபுரத்திலுள்ள பெருமாள்களில் பெரும்பாலும் எல்லோரும் 'நின்ற திருக்கோலம்' தான். ''இருந்த திருக்கோலம்'' என்பதாக உட்கார்ந்த நிலையில் ஓரிரண்டு பெருமாள் இருக்கலாம். திருவெஃகாக்காரரோ, கிடந்த திருக்கோலம்'', அதாவது ஸ்ரீரங்கநாதர், பத்மநாபஸ்வாமி, சாரங்கபாணிப் பெருமாள் ஆகியவர்களைப் போலப் பள்ளி கொண்டிருப்பவர். இவரைப்பற்றி ஒன்று குறிப்பிட்டுப் பெருமையாக சொல்வார்கள்.

என்னவென்றால், எந்த க்ஷேத்திரத்திலுள்ள சயனக் கோலப் பெருமாளானாலும் சரி, அவருடைய சரீரம் மல்லாந்து படுத்திருந்தாலும், சிரஸையும் அந்தப்படியே வைத்து ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். முக மண்டலத்தை ஸன்னதி பக்கம் கொஞ்சமாவது திருப்பி பக்த ஜனங்களைக் கடாக்ஷித்துக் கொண்டுதானிருப்பார். ஸ்ரீ ரங்கநாதர் தெற்குப்பார்த்த திருமுக மண்டலத்தோடு மேற்குப் பக்கம் சிரஸை வைத்துக் கொண்டு கிழக்கே பாதத்தை நீட்டிக் கொண்டிருப்பவர். நாம் அவருடைய ஸந்நிதிக்கு எதிரே நின்று

பார்க்கும் பொழுது நமக்கு இடது கைப் பக்கம் அவருடைய சிரஸும், வலது கைப் பக்கம் பாதமுமாக இருப்பார். திருவனந்தபுரத்தில் பத்மநாபஸ்வாமி கிழக்குப் பார்த்த திருமுகமண்டலத்தோடு இருக்கின்றார். அவர் தெற்கே சிரஸும் வடக்கே பாதமுமாக சயனித்துக் கொண்டிருப்பதால், அவரையும் நாம் எதிரேயிருந்து பார்க்கும்பொழுது நமக்கு இடது கைப் பக்கம்தான் சிரஸ், வலது கைப் பக்கம்தான் பாதம் என்று இருக்கும். கும்பகோணத்தில் ஆராவமுதன் என்கின்ற சாரங்கபாணியும் அப்படித்தான் இருக்கிறார்.

திருவெஃகாவில் மாத்திரம் எப்படியிருக்கிறதென்றால், பெருமாள் தெற்கு வடக்காக சிரஸ், பாதங்களை வைத்து சயனித்திருந்தாலும் ஸந்நிதி மேற்குப் பார்த்து அதாவது அவருடைய திருமுக மண்டலம் மேற்குப் பார்க்கிறது. இதனால் என்னவாகிறதென்றால் நாம் அவருக்கு எதிரே நின்று தரிசிக்கும் போது நம்முடைய வலது கைப் பக்கம் அவர் சிரஸும் இடது கைப்பக்கம் பாதமும் இருக்கின்றன.

மேலே சொன்ன மற்ற சயன மூர்த்திகளின் வலது பார்ச்வம் (Right side) நமக்குக் கிட்டேயும், இடது பார்ச்வம் (left side) திருமேனிக்கு மறு பக்கம், நமக்குத் தள்ளி அந்தண்டையும் இருக்கும். ஸந்நிதிப் பக்கமாக நமக்குக்கிட்ட இருக்கும் வலது கையை நன்றாகத் தூக்கி அவர் அபயம் காட்டுவதாக அந்தப் பெருமாள்களின் அர்ச்சை அமைந்திருக்காது. சயன பீடத்தை ஒட்டினாற்போலவே அந்தக் கை தலைப்பக்கமாக மடிந்திருப் பதாகத்தான் மூர்த்தி பெரும்பாலும் அமைந்திருக்கும். அதாவது அந்தக் கையையே அவர் 'தலைக்கோசரம்' (தலைக்கு உயரமான தலையணை) மாதிரி வைத்துக் கொண்டிருக்கும் பாவனையில் தான் அர்ச்சை இருக்கும். உள்ளங்கையை விரித்து அவர் அபய முத்திரை காட்டினாலுங்கூட, முழங்கைக்குக் கீழே எடுப்பாகத் தூக்கி நன்றாக ஆசீர்வாதம் செய்கிறாற்போலில்லாமல், பீடத்தின்

மட்டத்தோடேயே சேர்ந்தாற்போலதான் கை இருக்கும். கையைத் தூக்கினால் திருமேனியையே கொஞ்சம் மறைக்கிறாற் போலக் குறுக்கே நிற்கும்; கர்ப்பூரம் காட்டும்போது அதன் நிழல் திருமேனி மேல் விழும் என்பது காரணமாயிருக்கலாம். அதோடு கூட Horizontal ஆக குறுக்கு வாட்டமாக - சயன மூர்த்தியைப் பெரிசாகச் சிற்பத்தில் வடிக்கிறபோது முன்னங்கையைத் தூக்கினாற் போல் பண்ணுவதில் சிரமங்கள் உண்டு.

ஆனால், திருவெஃகாவில் ஸ்வாமி மற்ற சயன மூர்த்திகளைப்போல் இல்லாமல், வித்யாசமாக, தெற்கே சிரஸ், வடக்கே பாதம், ஆனால் மேற்குப் பார்த்த திருமுக மண்டலம் என்று இருப்பதால் எல்லாம் மாறிப்போகின்றன! எதிரே ஸந்நிதியில் நின்று தரிசிக்கும்போது அவருடைய இடது பார்ச்வம் நமக்குக் கிட்டேயும் வலது பார்ச்வம் அந்தண்டையு மாக இருக்கின்றன. அதாவது அவரது இடது கை நமக்குக் கிட்டேயும் அபய முத்திரை காட்டக் கூடிய வலது கை திருமேனிக்கு மறுபுறமுமாக இருக்கும். இங்கே, ஸ்வாமி வலது கையைத் தலைக்கோசரம் மாதிரி வைத்துக் கொண்டாரானால் முகத்தை அந்தக் கைப்பக்கமாகச் சாய்க்க நேர்ந்து, அவர் ஸந்நிதியைப் பார்க்கிறதற்குப் பதில் பின் சுவரைப் பார்ப்பதாகி விடும்! அதனால் இங்கே பெருமாள் மூர்த்தி அப்படியில்லை. இடது பக்கமாக ஸந்நிதியை - ஸந்நிதியில் நிற்கிற நம்மை- பார்க்கிறாற்போலவே அவர் முகத்தைச் சாய்த்தபடி சயனித்துக் கொண்டிருக்கிறார்.

-(தொடரும்)

---

1995-ம் வருடம் ஜூலை மாதம் 'மதுரமுரளி'யின் சந்தாதாரர்களாக சேர்ந்தவர்கள், இரண்டாவது வருட சந்தாவை - July 1996 இதழிலிருந்து புதுப்பித்துக் கொள்ளவும்.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 11

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

மனிதனாய் பிறப்பது மிகவும் அரிது. அப்படி பிறந்தாலும் மோக்ஷத்திற்குப் போகவேண்டும் என்ற ஆசை வந்து, ஒரு ஆத்ம ஞானியை குருவாக அடைவது என்பது மிகவும் துர்லபம். ஸகல மஹாத்மாக்களின் கருத்தும் இவ்விஷயத்தில் ஒன்றுபட்டு உள்ளது. பகவானும் அநுவாத நூன்மாலையில், ''பிறந்ததே மோக்ஷமடைவதற்குத்தான்'' என்கிறார்.

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் இன்பமடைவதன் பொருட்டே காரியங்கள் செய்கின்றன. வேலைக்குப் போவது, திருமணம் செய்து கொள்வது போன்ற ஸகல காரியங்களின் நோக்கம் சுகமே என்றாலும், இவைகளிலிருந்து சுகம் எப்பொழுதோ ஒரு முறை பல துக்கங்களுக்கு நடுவில் வருகிறது. நமக்கு துன்பம் ஏற்படும் காலங்களில் விரக்தி ஏற்பட்டாலும், கால தேசத்தினால் சிறிது மாற்றம் ஏற்படும் பொழுது லௌகீக சுகங்களுக்கு ஆசைப்படுகிறோம். பல பிறப்புகளால் மனமானது உலகை நோக்கி சென்றதே இதற்குக் காரணம். குளிர் காலத்தில் இதமாய் இருக்கும் கம்பளி, கோடையில் சுடுகிறது. ஒரு பொருளிலிருந்து வரும் அனுபவம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது. ஆக, வெளி விஷயங்களில் இருந்து சுகம் வராது. அவை ஜடம். ஆகையால் மஹாத்மாக்கள் துக்கக் கலப்பில்லாத ஆத்மானந்தத்தைத் தேடுகிறார்கள்.

மோக்ஷப் பாதையில் செல்பவர்களுக்கு லௌகீக விஷயங்களில் தீவிர வைராக்கியம் ஏற்பட வேண்டும். நேரெதிர்

பாதைகளான ஆன்மீக, லௌகீக விஷயங்களில் ஒரே சமயத்தில் ஈடுபடுதல் சாத்தியமாகாது.

லௌகீகமானவர்களும் சுகத்தையே தேடுவதால், அறியாமல் ஆத்மாவையே தேடுகிறார்கள். திருடனின் லட்சியம் கூட சுகம் தான். மஹாத்மாக்கள் சரியான பாதையைக் காண்பிக் கிறார்கள். ஒவ்வொருவரின் உள்ளே இருக்கும் ஆனந்தத்தைக் காட்டி கொடுப்பவரே குருநாதர்தான்.

சம்சாரத் தளைகளில் சிக்குண்டுள்ள ஒருவரால் தனக்கோ, மற்றவருக்கோ உள்ள சம்சார பந்தங்களை அறுக்க இயலாது. லௌகீகமான விஷயங்களான வியாதி, பணம் உள்ளிட்ட கஷ்டங்களைத் தீர்ப்பவர் ஒரு குருவாக மாட்டார். யாரிடம் போனதினால் ஒருவருக்கு ஞானமடைய வேண்டும் என்ற தாபம் ஏற்படுகிறதோ அவரே குரு ஆவார். ***அவர் ஜீவன் முக்தராக இருந்தால் தான் மற்றவருக்கு ஞானம் ஏற்படும்.***

லௌகீக சுகங்கள் நிரந்தரமானவை அல்ல. இன்று வரை வராத கஷ்டம் நாளை வராது என்பதும் நிச்சயமில்லை. மேலும், சத்யம் என்று நினைத்துப் பழகும் இவ்வுலகும் பொய்தான். நமக்கு மறுபிறப்பு வந்தால் இவ்வுலகில் பழகிக் கொண்டிருக்கும் அனைவரும் 'யாரோ' என்று ஆகி விடுவர். இதற்காகவும் ஆத்மாவைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தூங்குவதற்கு முன்னும், பின்னும் ஒருவரின் குணாதிசயங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. தூக்கம் ஒரு மனோலயம். மரணமும் ஒரு மனோலயம் போலத்தான். ஆகையால், வேறு ஒரு பிறப்பில் ஆத்மாவுக்கு முயற்சி எடுப்போம் என்பதும் சரியாகாது.

மிகுந்த கஷ்டப்படும் ஒருவரை மருந்துகளால் சாகடிப்பது (Mercy Killing) என்பது சரியான தீர்வு ஆகாது. தற்கொலை பண்ணிக்கொள்கிறவனுக்கு அடுத்த பிறவியில் அதே துக்கம் வந்தே தீரும். ஆக, அனைத்துக்கும் தீர்வு ஆத்மானந்தத்திற்கு பாடுபடுவதே.

பிரபஞ்ச விண்வெளியில் உள்ள வேத சப்தங்களை ராஜ யோகம் நன்கு பயின்று சித்தி பெற்றவர்கள் கிரஹித்து எழுதி வைத்தார்கள். அவர்கள் தங்கள் பெயரையும் தாங்கள் கிரஹித்த சப்தங்களையும் எழுதி வைத்தார்கள். இவ்வாறு மந்திரங்களை நேரில் பார்த்தவர்களுக்குதான் ரிஷி என்று பெயர். இதைத்தான் வியாசர் தொகுத்து வைத்தார்.

அதே போல், அக்ஷர மணமாலையை ரமணர் கிரிப் பிரதக்ஷிணம் செய்யும் காலத்தில் செய்தார். தனது சங்கல்ப மில்லாமல், பகவத் ப்ரேரணையினால் செய்தார். இது தமிழா, சமஸ்கிருதமா என்றால், இது தமிழ்கூட இல்லை. *சமாதி அனுபவத்தில் இருந்த ஒருவரிடம் இருந்து வெளிப்பட்ட தினால் இது சமாதி மொழி ஆகும்.*

இது மாதிரி கிரந்தங்களில் உள்ள ஆச்சர்யம் என்ன என்றால், இவை பக்தி, வேதாந்தம், யோகம் என்று பலவித மாகவும் இருக்கும். *வித்வான்களால் இதற்கு பதவுரை எழுத முடியாது. அநுபூதி பெற்ற மஹாத்மாக்களால் தான் ஸ்புரித்து எழுத முடியும்.*

பகவான் பாற்கடலைக் கடைந்தார் என்றால், யோகபரமாக மேருமலையே முதுகு தண்டு வடம். வாசுகி பாம்பு தான் ஸுஷும்னா நாடி என்று போய் கடைசியில் கிடைக்கும் அம்ருதமே ஜீவன் முக்தி நிலை என்று முடிக்கலாம். தத்வ பரமாகப் பார்த்தால், அசுர குணங்களும், ஸாத்வீக குணங்களும் ஒவ்வொரு பக்கம் இழுக்க, பக்தியை துணை கொண்டால் ஜயிக்கலாம். தத்வ, யோக பரமாக பார்க்காமல் பகவான் வந்தார், பாற்கடலை அடைந்தார் என்று பக்தி பரமாகவும் கொள்ளலாம். மகாத்மாக்களின் கிரந்தத்தில் இது மாதிரி ஆச்சர்யமிருக்கும்.

முதலில்

*'அருணாசலவரற்கேற்ற அக்ஷர மணமாலை சாற்றக்*
*கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே'*

என்கிறார்.

எந்த கிரந்தங்களைச் செய்தாலும் முதலில் கணபதியை பூஜை செய்வது வழக்கம். இது ஒரு சம்பிரதாயம்.

*'அருணாசல வரற்கேற்ற'*-

தனது நாயகனாக அருணாசலேஸ்வரனே இருக்க, அவனுக்கு ஏற்ற ஒரு ஸ்துதியாக நாயகி பண்ண நினைக்கிறாள். ஸ்துதியைக்கேட்டு நாயகனுக்கு தன் மேல் காதல் வர வேண்டும் என நினைக்கிறாள்.

மேலும், சுப்ரமண்ய சுவாமி வள்ளியைத் திருமணம் செய்யப்போகும் பொழுது கணபதியைப் பூஜை செய்யாமல் போனதினால் தடங்கல் ஏற்பட்டதை நினைந்து, தனக்கு அது மாதிரி வரக்கூடாது என்று வேண்டுகிறாள்.

மூலாதாரத்தில் கணபதி இருக்கிறார் என்பது யோக ரஹஸ்யம். அவரைத் தாண்டியே மீதி தெய்வங்கள் உள்ளன.

காட்டில் யானை போட்டு விட்டு போகும் மரக் கிளை, இலைகளுக்கு ஆசைப்பட்டு சுத்த சைவ இனமான மான், யானை போகும் வழியில் போகும். சிங்கம், புலியோ மானுக்கு ஆசைப்பட்டு அதே வழியில் போகும். யானை போகும் வழியில் மற்ற மிருகங்கள் எவ்வாறு செல்கின்றனவோ அது போல் கணபதியை ஒட்டி மற்ற சுவாமிகள் போகின்றனர். இதுவும் ஒரு தாத்பர்யம்.

*'அக்ஷர மண மாலை சாற்ற'*

அக்ஷரம் என்றால் எழுத்து என்று அர்த்தம் எழுத்துக் களால் கூடின ஒரு அமைப்பு. அக்ஷரம் என்றால் ப்ரும்மம் என்றும் அர்த்தம். 'சாற்றுதல்' என்பது மருவி 'சாற்ற' என்று வந்துவிட்டது. 'கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே'- கணபதியே, எனக்கு கை கொடுத்து உதவு என்கிறார்.

(தொடரும்)

தொகுப்பு : **ஸ்ரீ முரளீதரர் தாஸன்**

# செய்திகள்

## மே 16-ந் தேதி அன்று

சென்னை ***வில்லிவாக்கம்*** பாபா நகர் ஸ்ரீ பால வினாயகர் ஆலயத்தில், *'ஸ்ரீ மஹா பெரியவாள்'* பற்றி மாலை 7 முதல் 8-30 வரை ஸ்ரீ குருஜி ப்ரவசனம் செய்தார்கள். ஆஸ்தீகர்கள் நிறைந்த அளவில் வந்திருந்து ச்ரவணம் செய்து சந்தோஷித்தனர்.

❋ ❋ ❋

## ஜூன் 1-ம் தேதியன்று

சென்னை *பிரேமிக பவனத்தில் சம்ப்ரோஷணமும் ஸ்ரீ மஹா பெரியவாளின் 103வது ஜயந்தி மஹோத்ஸவமும்* விமரிசையாக நடைபெற்றன. இதை ஒட்டி மே 26-ந் தேதி முதலே நிகழ்ச்சிகள் ஆரம்பித்து விட்டன.

பாகவதஸ்ரீ ஸ்ரீராம் பாரதி அவர்களின் *அரையர் ஸேவையும்,* நீடாமங்கலம் ஸ்ரீமதி அலமேலு, ஸ்ரீமான் சுப்பராமன் அவர்களின் ***ஸ்ரீ க்ருஷ்ண கானமும்,*** பாகவதஸ்ரீ சௌந்தரராஜ பாகவதர் அவர்களின் *அபங்க திவ்ய நாம ஸங்கீர்த்தனமும்* நடைபெற்றன.

ஜூன் 1-ம் தேதி அன்று காலையில் கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம் எல்லாம் நடை பெற்று முடிந்த பிறகு பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. மாலையில் பிரம்மஸ்ரீ முல்லைவாசல் கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ கோடா வேங்கடேச சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ விஜயராகவ கனபாடிகள், முல்லை வாசல் பிரம்மஸ்ரீ ராமசுப்பு சாஸ்திரிகள் ஸ்ரீ மஹா பெரியவாளைப் பற்றி மிகவும் அழகாக

உபன்யாசம் செய்தார்கள். இரவு 9 மணி முதல் 11 மணி வரை பாகவதஸ்ரீ கல்யாணராம பாகவதரின் திவ்ய நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது.

❈ ❈ ❈

## ஜூன் 3ந்தேதி முதல் 9ம் தேதி வரை

சென்னை அசோக் நகர் பில்லர் அருகில் உள்ள *இந்திரா காலனி* ஸ்ரீ பால வினாயகர் கோயிலில் ஸ்ரீ குருஜியின் *பக்த விஜயம்* உபன்யாசம் இனிதாக நடைபெற்று முடிந்தது. முதல் இரண்டு நாட்கள் மட்டும் ஸ்ரீ குருஜிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் ஸ்ரீ பாலாஜி உபன்யாசம் செய்தார். எல்லா நாட்களிலும் பக்த ஜனங்கள் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்.

❈ ❈ ❈

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## ஜூலை 26ந் தேதியன்று – *அனுஷ நக்ஷத்ரம்*

மாதாந்திர *'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்' ப்ரேமிக பவனில்* நடைபெறும்

## ஜூலை 30ம் தேதியன்று – வியாஸ பூர்ணிமா

*வியாஸ பூஜை ப்ரேமிக பவனில்* நடைபெறும்.

**மங்களானி பவந்து**


# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95 | Regd. No. TN/MS/(S)/714

Single Copy Rs. 5/- | Annual Subs. Rs. 60/-

வேணு : 1 | ஜூலை 1996 | கானம் : 12


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras - 600 014. Editor : S. Sridhar